(முற்பகல் 9-50)

ஆ. சென்னை ஈட்டுறுதி E.S.I. மருத்துவமனை பணியாளர் மரணம்.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"சென்னை இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் பணியாற்றிய நான்காவது பிரிவு சிப்பந்தி திரு. ஆனந்தன் பணிபுரியும்போது இரண்டாவது மாடியிலிருந்து விழுந்து இறந்தது குறித்தும் இதே போன்று முன்னர் இரு சம்பவங்கள் நிகழ்ந்தது குறித்தும் அதனால் நோயாளிகளிடையேயும் சிப்பந்திகளிடையேயும் நிலவும் பதட்ட நிலை குறித்தும்."

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, சென்னை அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் 7—7—1980 அன்று துப்புரவுப் பணியாளரான திரு. வி. ஆனந்தன் பணியில் இருந்தார். (He was on duty on 7th July 1980) அன்று காலை அம்மருத்துவ மனையின் இரண்டாவது மாடியில் இருந்து கீழே விழுந்ததனால் இறந்து விட்டார்.

அம்மருத்துவமனையின் கண்காணிப்பாளர் 7—7—1980 அன்று காலை 9 மணியளவில் மருத்துவமனையை சுற்றிப்பார்த்துக் கொண்டு வந்தபோது காசநோய்ப் புற நோயாளர் பகுதிக்கருகே மேற்கண்ட துப்புரவுப் பணியாளர் நகர்வுப் படுக்கையில் Strecher வைத்து அவசர சிகிச்சைப் பிரிவுக்கு சிலர் கூட்டமாக கொண்டு போவதைக் கண்டார். துப்புரவாளர் கீழே விழுந்ததை நேரில் பார்த்த சான்றாளர் (Eye Witness) எவரும் இல்லை. துப்புரவு பணியாளருக்கு மருத்துவ நிபுணரால் உடனடி மருத்துவம் பார்க்கப்பட்டு ரத்தம் செலுத்தப்பட்டது. அதன் பின் அவர் மெல்ல சீரான நலம் அடைந்து கொண்டிருந்தார். எனினும் உடனடியாக அவர் சென்னை பொது மருத்துவமனைக்கு தீவிர மருத்துவ வசதியளிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டார். பின்னர் அங்கு அவர் இறந்து விட்டதாக அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை கண்காணிப்பாளருக்குச் செய்தி கிட்டியது.

1980 ஜூலை 23] [திரு. எஸ். இராகவானந்தம்]

கண்காணிப்பாளர் இந்த சம்பவத்தை விசாரித்ததில், மேற்படி துப்புரவாளர் மாடியில் இருந்து விழுந்ததை எவரும் பார்க்கவில்லை என்று தெரிந்தது. அவர் விசாரித்த எல்லோருமே ஓர் சத்தம் கேட்டதாகவும் மேற்கண்ட துப்புரவுப் பணியாளர் காசப் புற நோயாளிகள் பிரிவுக்கருகே கீழே விழ்ந்து கிடந்ததை மட்டும் கண்டதாகக் கூறினர். இந்தத் துப்புரவுப் பணியாளர் பணியாற்றிக் கொண்டிருந்த இரண்டாம் மாடியில் உள்ள 18 அல்லது 19 ஆம் வார்டில் இருந்து விழுந்திருக்க வேண்டும் என்று கண்காணிப்பாளர் கருதுகிறார். இருப்பினும் யாருமே இந்நிகழ்ச்சியை நேரே பார்க்காததால் இந்த விபத்து (Accident) எப்படி நிகழ்ந்தது என்று அறிய இயலவில்லை. விசாரணை அறிக்கையினைக் கேட்டு காவல்துறை ஆய்வாளருக்கும், சவ ஆய்வு அறிக்கை கேட்டு சென்னை மருத்துவக் கல்லூரியிலுள்ள சட்டஞ்சார்ந்த மருத்துவ இயல் பேராசிரியருக்கும் (Professor of Forensic Medicine, Madras) தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனை கண்காணிப்பாளர் கடிதம் எழுதியுள்ளார். அந்த அறிக்கைகள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள முன்பு நிகழ்ந்த இதுபோன்ற வேறு இரு விபத்துக்களை பற்றிய விவரம் பின்வருமாறு :

(1) ஈட்டுறுதி தொழிலாளர் திரு. வாசுதேவன் என்பவர் அயனாவரம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனையில் வார்டு எண் 17-ல் 6—12—1977 அன்று உள்ளிருப்பு நோயாளியாக சேர்க்கப்பட்டார். 11—12—1977 அன்று காலை 5 மணியளவில் அம்மருத்துவமனையிலுள்ள தோட்டத்தில் திரு. வாசுதேவன் அவர்கள் மயங்கிய நிலையில் காணப் பட்டார். 17-ம் வார்டில் பணியிலிருந்த செவிலியர், ஆண் செவிலிய உதவியாளர் மற்றும் துப்புரவாளர் ஆகியோர் யாருடைய பார்வையிலும் படாமல் அவர் 20-ம் வார்டுக்கு மறைவாகச் சென்று அங்கிருந்து திறந்த சன்னல் வழியாக கீழே குதித்திருக்க வேண்டும். மயங்கிய நிலையிலிருந்த திரு. வாசுதேவனுக்கு உடனடி முதலுதவி அளிக்கப்பட்டு சென்னை பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆயினும் மருத்துவமனை செல்லும் வழியிலேயே அவர் இறந்துவிட்டார். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் மீது தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(2) அடுத்து திரு. ஜே. பரமேஸ்வரன் என்ற ஈட்டுறுதி தொழிலாளர் உள்ளிருப்பு நோயாளியாக அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் தங்கியிருந்தபோது

இரண்டாவது மாடியில் இருந்து சன்னல் வழியாக குதித்து காயமடைந்தார். உடனடியாய் மருத்துவத்திற்காக அவர் சென்னை பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கே அவர் இறந்து போனார்.

இப்படிப்பட்ட விபத்துக்கள் (Accidents) நடக்காதிருப்பதற்கான காப்பு நடவடிக்கை எடுக்கும் வகையில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் தேவைப்பட்ட எல்லா சன்னல்களுக்கும் சாளரங்களுக்கும் பற்ற வைப்பு மூடுதடுப்புகளை (Weld mesh) உடனடியாக அமைக்குமாறு பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு இம்மருத்துவ மனையின் கண்காணிப்பாளர் எழுதியுள்ளார்.

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்துள்ள குறிப்பில் தெரிவது 11—12—1977 அன்று வாசுதேவன் என்ற ஒருவர் அதே மாடியில் 17 அல்லது 18 ஆம் வார்டிலிருந்து விழுந்து இறந்திருக்கிறார். அதன்பிறகு பரமேஸ்வரன் என்ற தொழிலாளி அதே வார்டிலிருந்து விழுந்து இறந்திருக்கிறார். ஆனால் தேதி குறிப்பிடப்பட வில்லை. அதேபோன்று பி. அன்ட் சி. மில் தொழிலாளர் ஒருவரும் விழுந்து இறந்திருக்கிறார். இப்படி விழுந்து இறந்து போகிற சம்பவம் தொடர்ந்து நடக்கிறது. ஆகவே, அங்குள்ள தொழிலாளர்களும் நோயாளிகளும் அந்த வார்டை தங்களுக்கு ஏற்படுகிற நோயின் காரணமாக தற்கொலை செய்து கொள்ளக்கூடிய வார்டு என்று நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட விபத்துக்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப் பட்டிருக்கிறது. தடுப்பு நடவடிக்கையாக உடனடியாக அந்த வார்டை சுற்றிலும் 'வெல்டு மெஷ்' அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இந்த சம்பவங்களை எல்லாம் மனதிற்கொண்டுதான் பாதுகாப்பு நடவடிக்கையாக எல்லா சன்னல்களுக்கும் சாளரங்களுக்கும் பற்ற வைப்பு மூடுதடுப்புகளை (வெல்டு மெஷ்) உடனடியாக அமைக்குமாறு பொதுப் பணித்துறை அதிகாரிகளுக்கு மருத்துவ மனையின் கண்காணிப்பாளர் எழுதியுள்ளார்.

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள்; எழுதியிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அந்த வார்டிலிருந்து தொடர்ந்து விழக்கூடிய சூழ்நிலை இருப்பதால் அங்கே காவலாளி போட்டு, இப்படிப்பட்ட சம்பவங்களைத் தடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

1980 ஜூலை 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காவலாளியும் விழாமல் இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, காவலாளி போட வேண்டுமா, தேவையா என்பதுபற்றி பரிசிலிக்கப்படும்.

4. அறிவிப்பு.

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் இசைவு தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்ட முன்வடிவு.

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.